**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**

**முன்னிலை: செல்வி. சு. அபூர்வா, பி.ஏ., எல்.எல்.பி.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, பழனி.**

**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் நாள் புதன்கிழமை**

**இ.ம.எண்.4/2026**

**இன்**

**அ.வ.எண். 152/2025**

திரு.V.தங்கராஜ் .....மனுதாரர்/வாதி

**--எதிரிடை--**

1. உதவி மின் பொறியாளர்,

தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்,

அடிவாரம், பழனி.

2. செயற்பொறியாளர்,

தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்,

அடிவாரம், பழனி. ....2, 3 பிரதிவாதிகள்

இந்த மனுவானது என் முன்பாக கடந்த 15.04.2026–ஆம் தேதி இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.P.பெருமாள்,** அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு

வாதங்கள் கேட்கப்பட்டும், மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், நாளது தேதி வரை இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று வழங்கும்...

**உத்தரவு**

அசல் வழக்கில் இறுதி தீர்ப்பு பிறப்பிக்கப்படும் வரை தாவா மனு சொத்தில் மனு/வாதி குடியிருக்கும் வீட்டிற்கு மின் இணைப்பினை வழங்க வேண்டும் என்று இடைக்கால செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம் :**

2.1. மனுதாரர் எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது தாவா சொத்துக்களிலிருந்து தன்னை சட்டத்திற்கு புறம்பாக வெளியேற்றக்கூடாது (Due Process Law) என பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வேண்டியும், செலவு தொகைக்காகவும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றும், இந்நிலையில் தானும், தனது குடும்பத்தினரும் கடந்த 05.12.2025-ம் தேதி முதல் நாளது தேதி வரை வீட்டில் மின்சாரம் இல்லாமல் வயதான காலத்தில் மிகுந்த சிரமத்தில் இருந்து இருக்கிறார்கள் என்றும், சுமார் 15 ஆண்டுகளுக்கு மேலாக தான் குடியிருக்கும் வீட்டிற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின் இணைப்புக்கு உண்டான தொகையை செலுத்தியுள்ளார் என்றும், இந்நிலையில் தன்னிடம் எவ்வித விளக்கமும் கேட்காமல் தன்னிச்சையாக செயல்பட்டு மின் இணைப்பை துண்டித்ததால் தான் மிகுந்த பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளார் என்றும், மேற்படி மின் வாரிய அலுவலகர்களின் செயல் சட்டவிரேதமானது என்றும், எனவே வழக்கில் மின்சார வாரிய அலுவலர்களை தரப்பினர்களாக சேர்க்க வேண்டி I.A.No.1/2025 -ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனு சமூகம் நீதிமன்றத்தில் கடந்த 10.04.2026-ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி அசல் வழக்கு


APOORVA S Digitally signed by APOORVA S Date: 2026.04.15 20:13:47 +0530

இறுதி செய்யப்படும் வரை தாவா சொத்தில் தான் குடியிருக்கும் வீட்டிற்கு மின் இணைப்பினை (மின் இணைப்பு எண்.282-006-1204) வழங்க இந்த 2, 3 பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்களுக்கு இடைக்கால செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி இம்மனு தன்னால் தாக்கல் செய்யப்படுகிறது என்றும், அவ்வாறு சமூகம் நீதிமன்றம் இம்மனுவினை ஏற்றுக்கொண்டு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்காவிடில் தனக்கு பெருத்த கஷ்ட, நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்றும், இவ்வழக்கில் தனக்கு முதல் நிலைநோக்கு சமநிலை சார்வும் தனக்கு சாததமாகவே உள்ளது என்றும், மேற்படி மின் இணைப்பு வழங்கவதற்கு எதிர்மனுதாரர்களுக்கு யாதொரு நியாயமான ஆட்சேபணையும் இருக்கப்போவதில்லை என்றும் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் தாக்கல் செய்த இம்மனுவை அனுமதிப்பதற்கு தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், "மனுதாரர் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா என்பது ஆகும்."

**6. <u>தீர்வு</u> :**

6.1. மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கில் இறுதி தீர்ப்பு பிறப்பிக்கப்படும் வரை தாவா மனு சொத்தில் மனு/வாதி குடி இருக்கும் வீட்டிற்கு மின் இணைப்பினை வழங்க வேண்டும் என்று இடைக்கால செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க


APOORVA S
Digitally signed by APOORVA S
Date: 2026.04.15 20:13:54 +0530

வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவில் முதலில், தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க, முதல் தோற்ற வழக்கு **(Prima facie Case)** உள்ளதா? என்பதையும், வசதியின் சமநிலை **(Balance of convenience)** உள்ளதா? என்பதையும், தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்காதபட்சத்தில் மனுதாரருக்கு ஈடு செய்ய இயலாத இழப்பு **(Irrepairable loss)** ஏற்பட வாய்ப்பு உள்ளதா? என்பதையும் முடிவு செய்ய வேண்டியதுள்ளது.

6.2. மாண்பமை உச்சநீதிமன்றம் ***RamaKant Ambalal Vs. Harish Ambalal and others 2024*** என்ற வழக்கில் *“The burden is on the plaintiff, by evidence aliunde by affidavit or otherwise, to prove that there is a prima facie case in his favour which needs adjudication at the trial. The existence of the prima facie right and in fraction of the enjoyment of his property or the right is a condition precedent for the grant of temporary injunction. Prima facie case is not to be confused with prima facie title which has to be established on evidence at the trial. Only prima facie case is a substantial question raised, bona fide, which needs investigation and a decision on merits. Satisfaction that there is a prima facie case by itself is not sufficient to grant injunction. The court further has to satisfy that noninterference by the court would result in “irreparable injury” to the party seeking relief and that there is no other remedy available to the party except one to grant injunction and he needs protection from the consequences of apprehended injury or dispossession”* என்று கூறப்பட்டுள்ளது.

6.3. அசல் வழக்கானது தான் எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது தாவா சொத்துக்களிலிருந்து வாதியை சட்டத்திற்கு புறம்பாக வெளியேற்றக்கூடாது (Due Process Law) என பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வேண்டியும், தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பினை 2, 3 பிரதிவாதிகள் துண்டிக்க கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் மனுதாரர் வாதியால் இந்த எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 2, 3


APOORVA S Digitally signed by APOORVA S Date: 2026.04.15 20:14:02 +0530

பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் தாவாச்சொத்தில் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், வாதி அளித்த வாய்மொழி உடன்படிக்கையின்படி தாவாச்சொத்தின் வடமேற்கு மூலையில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றும், தற்போது வாதி/மனுதாரரை தாவா சொத்துக்களில் இருந்து வெளியேறும் படி மிரட்டி வருகிறார் என்றும், தன்னை சட்டப்படி அல்லாமல் பிரதிவாதி வெளியேற்றக்கூடாது என்று அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் கடந்த 05.12.2025-ம் தேதி இந்த எதிர்மனுதாரர்களால் தாவா சொத்தில் குடியிருக்கும் மனுதாரர் வீட்டிற்கு உள்ள மின் இணைப்பை எவ்வித முன் அறிவிப்பும் இல்லாமல் துண்டித்துவிட்டார்கள் என்றும் வாதிடப்பட்டது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனு சொத்தில் உள்ள மனுதாரர் வீட்டில் உள்ள மின் இணைப்பு தவறாக துண்டிக்கப்ப்டுள்ளது என்றும், இம்மனுவை அனுமதிப்பதில் ஆட்சேபனை இல்லை என்றும் வாதிடப்பட்டது. மனுதாரர் மனுச்சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்பது தெரிய வருகிறது. மனுதாரர் தரப்பில் முதல் நிலை தோற்ற வழக்கும், சமநிலை சார்வும் உள்ளது என்பதையும் இம்மனுவை அனுமதிக்கவில்லை என்றால் மனுதாரருக்கு ஈடு செய்யமுடியாத இழப்பு ஏற்படும் என்பதையும் மனுதாரர் நிரூபித்துள்ளார் என்பதை கருத்தில் கொண்டும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவை அனுமதிப்பதில் தங்களுக்கு ஆட்சேபணையில்லை என்று கூறப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7. இறுதியாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. அசல் வழக்கில் இறுதி தீர்ப்பு பிறப்பிக்கப்படும் வரை மனுச்சொத்தில் மனுதாரர் குடியிருக்கும்


APOORVA S
Digitally signed by APOORVA S
Date: 2026.04.15 20:14:10 +0530

வீட்டிற்கு மின் இணைப்பனை (மின் இணைப்பு எண்.282–006–1204) வழங்க எதிர்மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகள் மீது இடைக்கால செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 15 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

APOORVA S

Digitally signed by APOORVA S
Date: 2026.04.15 20:14:16 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**பழனி.**

**மனுதாரர் தரப்பு சாட்சி:** இல்லை.

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி:** இல்லை.

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :** இல்லை.

APOORVA S

Digitally signed by APOORVA S
Date: 2026.04.15 20:14:23 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**பழனி.**